Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No.414/2024

2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | வனவர் |
| பெயர். | - | சங்கர் | வட்டம் | - | திருத்தணி |
| த/பெ. | | மண்ணாங்கட்டி | சமயம் | - | |
| கிராமம் | - | திருத்தணி | வயது | - | 46 |

20.02.2026

2 வது எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சென்னை மண்டலம், திருவள்ளுவர் வனகோட்டம், திருத்தணி வனச்சரகத்தில் வனவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 24.01.2016 ந் தேதி உளுந்தூர்பேட்டை வனச்சரகம் மலட்டாறு பீட்டில் கூடுதல் பொறுப்பாக வனக்காப்பாளராக பணிபுரிந்த போது கீழ்தணியாளம்பட்டு சுடுகாட்டு பாதை சராகத்தில் மணல்தடுப்பு வனச்சுற்று காவல் பணி மேற்கொண்ட போது திருட்டு தனமாக மணல் எடுப்பதை கண்டுபிடித்து உளுந்தூர்பேட்டை வனச்சரகருக்கு தகவல் கொடுத்ததன் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த உளுந்தூர்பேட்டை வனச்சரக அலுவலர் ஆர்.எம்.பெருமாள் மற்றும் வனக்காப்பாளர் குணசேகரன் ஆகியோருடன் குழுவாக மணல் எடுத்த பகுதியை வனச்சரக அலுவலர் தணிக்கை மேற்கொண்டு சந்தேகத்திற்கு இடமான எதிரி கீழ்தணியாளம்பட்டு சீத்தாராமன் மற்றும் கந்தன் ஆகியோர்கள் வீட்டின் அருகே சென்று பார்த்தோம்.

2. பார்த்த போது வனச்சரக காப்பு காட்டிலிருந்து மணல் எடுத்துவந்து கொட்டி இருப்பதை கண்டுபிடித்து எதிரிகளிடம் விசாரணை மேற்கொண்டு பிடிபொருட்களை கைப்பற்ற முயன்ற போது அடையாளம் தெரியாத ஆட்களை கொண்டு பிடிபொருட்களை எடுத்துச்சென்று மறைத்துவிட்டனர்.

3. மேலும் எதிரிகளை பிடிக்க முயன்ற போது 2 வது எதிரி கந்தன் தப்பி ஓடி தலைமறைவாகிவிட்டார். 1 வது எதிரி சீத்தாராமனை பிடித்து விசாரணை மேற்கொண்டதில் நாங்கள் இரட்டை டயர் மாட்டு வண்டி மூலம் சாலை போடுவதற்கு 23.01.2016 ந் தேதி மாலை சுமார் 05.30 மணியளவில் நானும்,

கந்தன் என்பவரும் எங்களது ஊரில் சுடுகாட்டு செல்லும் பாதையில் உள்ள காப்பு காட்டு பகுதியில் மாலை சுமார் 06.00 மணிக்கு மேல் திருட்டு தனமாக மணல் எடுத்துவந்து கொட்டி சம்பவ இடத்தில் வைத்திருந்ததாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

4. பின்பு வனச்சரக அலுவலர் மணல் பகுதிகளை புகைப்படம் எடுத்து 1வது எதிரி அரசு வாகனம் மூலம் உளுந்தூர்பேட்டை வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டு வந்து வழக்கு எண் வழங்கப்பட்டு அடைப்பு காவலுக்கு வேண்டிய ஆவணங்கள் தயார் செய்ய உதவியாக இருந்தேன். மேலும் மகசர் என்னால் தயார் செய்யப்பட்டது. அந்த மகசர் அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. **நான் பதிவு செய்த முதல் தகவல் குற்ற அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். மேலும் எதிரி சீத்தாராமன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவு செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.5 ஆகும்.**

**<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**.

1. அ.சா.ஆ.4 எந்த தேதியில், எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் 24.01.2016 காலை 09.30 மணிக்கு தயார் செய்யப்பட்டது. அ.சா.ஆ.4 ல் எந்த தேதியில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் சம்பவம் 24.01.2016 காலை 09.30 மணிக்கு என்று உள்ளது என்றால் சரிதான்.

2. முதல் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் 2 வது எதிரி மீது வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் படிவம் -அ-ல் 9 வது காலத்தில் குற்ற எதிரியை குழுவினர் பிடிக்க முயன்ற போது 1வது எதிரி கையும் களவுமாக சுற்றி வளைத்து பிடித்தனர். 2 வது எதிரி தப்பி ஓடிவிட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது.

3. வழக்கில் களவு போன பொருட்களின் மதிப்பு என்னவென்றால் 23 நடை மாட்டு வண்டி மூலமாக திருடப்பட்ட மணல். இந்த வழக்கில் பிடிபொருள் எதுவும் இல்லை என்றால் இல்லை, மணல் மட்டும் தான் பிடிபொருள். அந்த பிடிப்பட்ட மணலை நீதிமன்றத்தில் வழக்குசொத்தாக ஒப்படைக்கப்பட்டதா அல்லது ஏலம் விடப்பட்டதா என்றால் பிடிப்பொருளான மணலை கைப்பற்ற முடியவில்லை, ஊர் மக்கள் கூடி பிரச்சனை பண்ணதால் செய்ய முடியவில்லை.

4. ஊர் மக்கள் கூடி என்ன பிரச்சனை செய்தார்கள் என்றால் ஊர் மக்கள் என்று இல்லை, எதிரிகளுக்கு வேண்டப்பட்ட நபர்கள் பிரச்சனை செய்தார்கள், இது சம்மந்தமாக அதிகாரியிடம் வாய்மொழியாக சொல்லியுள்ளேன். எவ்வளவு பேர் இருப்பார்கள் என்றால் எண்ணிக்கை தெரியாது, கும்பலாக இருந்தார்கள்.

5. அரசு பணியை செய்யவிடாமல் தடுத்ததாக எதாவது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. பிடிபொருட்களான மணலை நான் கைப்பற்ற முடியவில்லை, மக்கள் தடுத்துவிட்டார்கள், நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிழற்படம் என்னவென்றால் நிழற்படம் எடுத்தோம், அதன் பிறகு தான் பிரச்சனை செய்தார்கள். நாங்கள் எடுத்த நிழற்படத்தின் அசல் எங்கு உள்ளது என்றால் பிரிண்ட் போட்டு கொடுத்துள்ளோம். அ.சா.ஆ.2 ல் உள்ள இரண்டு படங்களும் ஒன்று தான் என்றால் சரிதான்.

6. அந்த இரண்டு நிழற்படமும் மணல் கொட்டி இருக்கும் இடம் தான், மணல் திருடப்பட்ட இடத்தில் எடுத்த நிழற்படம் இல்லை என்றால் சரிதான். மணல் கொட்டப்பட்ட இடம் எந்த சர்வே எண்ணில்

என்பதை காண்பிக்க அறிக்கையோ, ஆவணமோ கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கில் சம்மந்தப்பட்ட மணல் காப்பு காட்டிலிருந்து எடுக்கப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் காப்பு காட்டில் உள்ள மணலும், இந்த மணலும் ஒன்று தான். வெளியிலிருந்து அவர்கள் காசிற்கு வாங்கியிருக்கலாம் என்றால் இல்லை, அப்படி வாங்கியிருந்தால் நாங்கள் எதிரியை பிடித்த போது அதற்காக ஆவணங்களை அவர்கள் கொடுத்திருக்கலாம், அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை.

7. கைது குறிப்பாணையில் கைது செய்யப்பட்ட நபரின் பெயர் மற்றும் முகவரி என்ற காலத்தில் என்ன உள்ளது என்றால் ஆர்.எம். பெருமாள், வனச்சரக அலுவலர், உளுந்தூர்பேட்டை என்று உள்ளது . ஒப்புதல் வாக்குமூலம் எங்கு பெறப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் பெறப்பட்டது, அதில் சொல்லப்பட்டுள்ள ஓ.ஆர் நெம்பர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது. ஓ.ஆர் நெம்பர் ஒப்புதல் வாக்குமூலத்தில் கொடுக்கப்பட்டதால் ஒப்புதல் வாக்குமூலமே அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை.

8. வனக்காப்பாளருக்கு ஒப்புதல் வாக்குமூலம் வாங்க கூடிய அதிகாரம் இல்லை என்றால் அதிகாரம் உள்ளது. கந்தன் வீட்டில் 2 நடை மணல் கொட்டப்பட்டதாக சொல்லும் நிலையில் அதை காண்பிக்க எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டள்ள நிழற்படத்தில் உள்ள அந்த மணல் அங்கு கொட்டப்பட்டது தான்.

9. அ.சா.ஆ.2 ல் பக்கத்தில் வீடு இருப்பதாக எதுவும் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல, அதில் வேலி போடப்பட்டுள்ளது, பக்கத்திலே கந்தன் கட்டிய வீடு உள்ளது. பக்கத்தில் வீடு இருந்தை காண்பிக்க கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து அறிக்கை எதாவது பெற்றோமா என்றால் இல்லை.

23 நடை மணல் எதற்காக எடுத்து வரப்பட்டது என்றால் கிராம சாலை போடுவதற்காக எடுத்துவரப்பட்டது. கிராம சாலை அமைப்பது சம்மந்தப்பட்ட ஊராட்சியின் பணி என்றால் சரிதான். அதற்காக ஊராட்சி டென்டர் விட்டு தான் சாலை பணிகள் நடக்கும் என்றால் சரிதான், அதற்காக தான் இவர் மணல் எடுத்துள்ளார்.

10. டென்டர் பணி யாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை, இது காப்பு காட்டிலிருந்து எடுக்கப்பட்ட மணல், அதனால் விசாரணை செய்யவில்லை. மகசரில் 3 வது காலத்தில் எத்தனை வண்டி மணல் கைப்பற்றப்பட்டதாக உள்ளது என்றால் 5 நடை மணல் எடுத்துவந்து கொட்டியதாக குற்றம் என்று உள்ளது. மீதி 18 நடை எங்கு போனது என்றால் எழுதும் போது கைத்தவறுதலாக அவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

11. இந்த வழக்கில் திருடுபோனதாக சொல்லப்படும் 23 நடை மணலை திருடு போனதாக கணக்கு காட்டி நாங்களே விற்றுவிட்டோம் என்றால் இல்லை. கந்தன் வீட்டின் முன்பு 2 நடை மணல் கொட்டப்பட்டதற்கு மகசர் தனியாக எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றால் ஒரே இடத்தில் பக்கத்தில் இருந்ததால் ஒரு மகசர்தான் தயார் செய்யப்பட்டது. கொட்டப்பட்ட இரண்டு மணலும் பக்கத்து பக்கத்தில் தான் இருந்தது என்பதை காண்பிக்க நிழற்படமோ, விசாரணை அறிக்கையிலோ எதுவும் சொல்லியுள்ளேனா என்றால் அந்த மாதிரி எதுவும் இல்லை. நிழற்படம் உள்ளது, ஆனால்அது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எந்த காரணத்தால் அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் இது சம்மந்தமாக வனச்சரக அலுவலரை தான் கேட்க வேண்டும.

12. ஒப்புதல் வாக்குமூலத்தில் வனத்துறையை சார்ந்தவர்களை தவிர வருவாய் துறையை சார்ந்தவர்களோ அல்லது பொதுமக்களோ சாட்சியாக இருக்க வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், சம்பவம் நடந்த இடம் வனப்பகுதிக்கு சொந்தமான காப்பு காடு என்பதால் பெறவில்லை.

13. ஒப்புதல் வாக்குமூலமே 1வது எதிரியான சீத்தாராமனை மிரட்டி அலுவலகத்தில் வைத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. எதுவும் எழுதாத பேப்பரில் சீத்தாராமனிடம் கையெழுத்து வாங்கி கொண்டு அதன் பிறகு பூர்த்தி செய்தோம் என்றால் சரியல்ல. அதனால் தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் எழுதப்பட்ட வாசகங்கள் ஒரு மையிலும், கீழே உள்ள கையெழுத்து ஒரு மையிலும் உள்ளது என்றால் சரிதான், ஸ்டேட்மண்ட் எங்களிடம் உள்ள பேனாவில் எழுதப்பட்டது, கையெழுத்து போடுபவர் அவரிடம் உள்ள பேனாவில் கையெழுத்து போட்டிருப்பார். இந்த வழக்கிற்கும், ஆஜர் எதிரிக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றும் , தேவையில்லாமல் இந்த வழக்கில் அவரை சேர்க்கப்பட்டோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லாததால் தான் அவர் சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.